
30 செப்ரெம்பர் 2015 இலவச வணிக இதழியல்

# VANIGALAYAM
## வணிகலயம்


மலர் – 01 e.mail: vanigalayam100@gmail.com லயம் – 03

வடக்கு கடற்றொழிலாளரின்...





சாதனைநாயகன்




திருமணச்சேவை










வேலை வாய்ப்புக்கள்


# அக்ஷதை

உயர்ரக சைவ விருந்து



நல்லூர் கந்தனின் ஆலயத்திற்கு முன்பாக
இப்போது உயர்ரக சைவ விருந்தகம் அக்ஷதை.
சைவ உணவுப் பிரியர்களின் சரியான தெரிவு
குடும்பத்தினருடன் அழகிய சூழலில் அமைதியாக
சுத்தம் சுவை சுகாதாரத்துடன் உண்டு மகிழ்ந்திட
அக்ஷதை உயர்ரக சைவ விருந்தகம்



யாழ் குடாவில்
No 1 புடவை கடல்
இந்து கிறஸ்தவ இஸ்லாமிய
முறைப்படியான திருமண வைபவங்களுக்கு
தேவையான ஆடைகளின் அழகோவியம்
#. 01 SHOP IN JAFFNA
ஆடவர் நங்கையர் குழந்தைகளுக்கான
அனைத்துவிதமான ஆடைகளுக்கும் டொப்பாஸ்
TOPAZ
யாழில் முதன்மையானவர்கள்
இல 70 பெரிய கடைவீதி
யாழ்ப்பாணம்
தொலை பேசி 021 222 47 43




TVC
THAYA VIDEO CENTRE
தயா வீடியோ சென்ரர்
அனைத்து நிகழ்வுகளுக்குமான ஒருங்கிணைப்பு
வாழ்வின் ஒவ்வொரு மகிழ்ச்சியான தருணங்களிலும் உங்களோடு நாம்
அதிநவீன பந்தல், மேடைகள் மற்றும் அதி நவீன ஒளி அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் வேறெங்கும் இல்லாத வகையில் தற்போது எம்மிடத்தில்.....
உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
A5,Kathi Abubakkar Road,Jaffna. | A5, காதி அபூபக்கர் வீதி,யாழ்ப்பாணம்.
Tel: 075 961 0604, 021 222 9920

## ஆசிரியரிடமிருந்து........

தற்போது உங்கள் கரங்களில் தவழும் வணிகலயமானது இலவச மாநாந்த வணிக இதழாகும். 3 வது இதழ் மேலும் மெரு கூட்டப்பட்டு பக்கங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 6 வீதமாக காணப்படுகிறது. அதனை 10 வீத வேகமாக மாற்றுவதே தமது அரசின் முக்கிய இலக்கு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவர் எனெட் டிக்சனிடம் தெரிவித்துள்ளார். இலங்கையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு உலக வங்கி ஆற்றிய பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்துள்ள ஜனாதிபதி புதிய அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்திக்கும் வேலைத் திட்டங்களுக்கும் உலக வங்கி உதவ வேண்டுமென வேண்டு கோளும் விடுத்துள்ளார்.

வறுமையை ஒழித்து வருமான மட்டத்தினை பெருக்குவது புதிய அரசின் முக்கிய வேலையென உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவர் எனெட் டிக்சனிடம் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி போதைபொருள் கடத்தல் பாரிய சவாலான விடய மெனவும் பல்தேசிய முதலீட்டாளர்களை கவர்ந்து ஏற்றுமதி சந்தையை பெருக்கவும் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். விவசாய உற்பத்தியினை பெருக்கி தேசிய உணவு உற்பத்தியை வலுவூட்டப் போவதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சொல்வது போன்று இவ்வாறான திட்டங்களை அப்பியாசப்படுத்தி வறுமையை ஒழித்து வருமான மட்டத்தினை உயர்த்தினால் மக்கள் மகிழ்ந்திருப்பார்கள் ஆனால் ஒரு தேசிய ஒற்றுமையை சாத்தியபப்படுத்தாமல் நாட்டினை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்வது சாத்தியமா என்பது கேள்விக்குறியே? குறிப்பாக வடக்கு கிழக்கினை விசேட வர்த்தக வலயமாக மாற்றாமல் வடக்கின் பொருளாதாரத்தினை மேம்படுத்தவது எந்த அளவு சாத்தியம்? குறிப்பாக உலகமயமாக்கலுடன் ஓரளவு எற்கனவே பழகிப்போன தென்னிலங்கை போட்டியாளர்களுடன் வடக்கு போட்டியாளர்களால் தற்போது தாக்கு பிடிக்க முடியாது என்ற நிலையே யதார்த்தம் ஆகும். அத்தடன் வடக்கின் விவசாயிகளுக்கான நல்லதொரு சந்தை வாய்ப்பினை உருவாக்காது தேசிய உணவு உற்பத்தியை வலுவூட்டுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். வடக்கின் விவசாயிகளுக்கான சரியான சந்தை வாய்ப்பு இல்லாத காரணத்தால் அடுத்த தலைமுறையினர் விவசாய உற்பத்தியில் ஈடுபட தயார் இல்லாத அதே வேளை ஆண்டாண்டு காலமாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்த விவசாயிகளும் தமது பிள்ளைகளுக்கும் தமக்கு நேர்ந்த ஏமாற்றம் மிகுந்த சந்தை வாயப்பு நிலை ஏற்படக்கூடாது என எண்ணுவதால் தமது பிள்ளைகள் விவசாயத்தில் ஈடுபடுவதனை பார்க்கிலும் வேறு துறைகளில் ஈடுபட வேண்டும் என எண்ணுகிறார்கள். ஆகவே வடக்கின் விவசாயி களுக்கான சரியான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தாமலும் வடக்கின் கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் இந்திய இழுவைப்படகின் அட்டகாசத்தினை முடிவுக்கு கொண்டுவராமலும் பொருளதார வளர்ச்சி வேகத்தினை 10 வீதமாக மாற்றுவது சாத்தியமில்லை யென்று துணிந்து கூறலாம்.

## செய்திகள்

### வேலை வாய்ப்பு பிரச்சினையை தீர்க்க தவறியது மகிந்த அரசு

2014 ஆண்டு தொழிலின்மை வீதம் 2013இல் பதிவு செய்யப்பட்ட 4.4 சதவீதத்திலிருந்து 4..3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் 2014 ம் ஆண்டின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பில்லாத பிரச்சினையானது தசம் 1 வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை இலங்கை மத்திய வங்கி அடையாளப்படுத்தியுள்ளது. தொழிலுக்கு அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்தமையாலும் பொருளாதாரத்தின் பல துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியால் தொழிலற்றோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமையாலும் ஏற்பட்ட தொழில்நிலை உருவாக்கத்தால் ஏற்பட்டதாக அது தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 0.1 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் தொழிலற்றோரின் எண்ணிக்கை 1.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த தாகவும் பெண்களின் தொழிலின்மை வீதம் 2013 இன் 6.6 சதவீதத்திலிருந்து 2014 இன் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஆண்களின் தொழிலின்மை வீதம் 3.2 சதவீதத்தில் மாற்றமின்றியே இருக்கின்றது.

வயதின் அடிப்படையில் 30 வயதுக்கு குறைந்தவர் களின் தொழில் இல்லாதபிரச்சினை 2013 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 இல் அதிகரித்தன. 15 தொடக்கம் 19 வயதுடையயோர் மற்றும் 20 தொடக்கம் 24 வயதுடையோர் முறையே 21..5 சதவீதம் மற்றும் 20.0 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு 15 வயது தொடக்கம் 19 வயதுடையோரும் அதே போல 20 வயது தொடக்கம் 24 வயதுடைய இளைய சமூகத்தினருக்கு வேலையில்லையென்ற மத்திய வங்கியின் அறிக்கையானது முக்கியமான உயர் தொழிலின்மை வீத பதிவு என்பது மோசமான நிலைமையாகும்.

இளைஞர்களிடையே உற்பத்தித்திறன்மிக்க தொழில் மணித்தியாலங்களின் விரயமாவது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை சமூக பிறல்வுகளுக்கும் கலாச்சார குலைவுகளுக்கும் குற்றங்களின் எண்ணிக்கையினையும் அதிகரிக்கும் என்ற யதார்த்த போக்கினை நல்லாட்சி கொண்டுள்ள புதிய அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

உலகளாவிய போக்குகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் மாற்றமுறும் பொருளாதாரத்துக்கான தேவைகளுக்கு பணியாற்ற முடியாத நிலைக்கு இட்டுச் செல்வதனால் இப்பிரச்சினை உடனடியானதும் ஆழமானதுமான கவனம் தேவைப்படுத்துகிறது.

தொடர்ச்சி 4ம் பக்கம்

**வேலைவாய்ப்பு தொடர்ச்சி......**

40 வயதிற்கும் அதற்கு மேற்பட்டதுமான வயதுடையோர் தொழில் வாய்ப்பு வீதமானது வீழ்ச்சியாக பதிவு செய்யப் பட்டிருந்தாலும் 30 வயது தொடக்கம் 39 வயதுடையோரின் வேலையில்லாப்பிரச்சினையானது 2013 ம் ஆண்டிற்கும் 2014 ம் ஆண்டிற்கும் எவ்வித மாற்றமும் இல்லையென இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மட்டத்தின் அடிப்படையில் க.பொ.த(உ.த) மற்றும் அதற்குக் கூடுதலான தகைமையைக் கொண்ட வகையினரைத் தவிர அனைத்து வகைகளிலும் தொழிலின்மை வீதங்கள் 2013 ம் ஆண்டிற்கும் 2014 ம் ஆண்டிற்கும் இடையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது.

கடந்த 10 ஆண்டுகள் க.பொ.த(உ.த) மற்றும் இதற்குக் கூடுதலான தகைமையைக் கொண்டவர்கள் தொழிலின்மை வீதம் 2013 ல் 8.6 சதவீதத்தி லிருந்து 2014 இல் 8.1 சதவீதம் என்ற மோசமான நிலையை அடைந்துள்ளது அரசின் தோல்வியையே சுட்டிக்காட்டுகின்றது.

க.பொ.த(சா.த) தகைமையுடையவர்களின் தொழிலின்மை வீதம் 5.9 சதவீதமாக விளங்கிய வேளையில் 6ம் ஆண்டு தொடக்கம் 10 ம் ஆண்டு வரை கற்றவர்களின் தொழிலின்மை வீதமான 3.4 சதவீதமாக இருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த கல்வி தகைமையுடையோரை விட உயர்கல்வி தகைமையுடையோர் தொழில் பெறுவது கடினம் என்பதை இத் தொழிலின்மை வீதங்கள் வெளிப்படுத்துகின்றன.

இது உயர் கல்வி தகைமையுடையோருக்கு கல்வி மீது செலவிடப்படும் அரச நிதியங்கள் எவ்வித பிரயோசனத் தினையும் தரவில்லையென்பது புலனாகின்றது

## பொருளாதார போட்டியில் இந்தியா அந்த மாதிரி முன்னேற்றம்

உலக பொருளாதாரத்தில் 2005-ஆம் ஆண்டு 10-ஆவது இடத்திலிருந்த இந்தியா, இப்போது 3-ஆவது இடத்துக்கு முன்னேறி யுள்ளதாக உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி 2014 ம் ஆண்டு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் இருந்தே இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் தெரிய வந்துள்ளது.

உலக பொருளாதாரத்தில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அதற்கு மிக நெருக்கமாக இரண்டாவது இடத்தில் சீனா உள்ளது. இந்த வரிசையில் 2005-ஆம் ஆண்டு 10-ஆவது இடத்தில் இருந்த இந்தியா, 2011-ஆம் ஆண்டு 3-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிடுகையில், சீனா, இந்தியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட 12 நாடுகளில் 6 நாடுகள் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகள் என்றால் நீங்கள் வியந்து போவீர்கள்.

உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியா, சீனா, ரஷியா, பிரேசில், இந்தோனேசியா, மெக்ஸிகோ ஆகிய நடுத்தர வருவாய் கொண்ட நாடுகள் 32..3 சதவீதமும், அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி ஆகிய உயர் வருவாய் கொண்ட நாடுகள் 32.9 சதவீதமான பங்கு வகிக்கின்றன என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்

இதில் இந்தியாவும் சீனாவும் மட்டும் உலக உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதமான பங்கை வகிக்கின்றன என உலக வங்கி விடுத்துள்ள புள்ளிவிவரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

## முட்டையிடும் சீன நாட்டவர்கள் கதையல்ல நிஜம்

பிளாஸ்டிக்கில் அரிசியை தயாரித்த சீனா, இப்போது கோழி முட்டையையும் போலியாக தயாரிக்கத் தொடங்கியுள்ளது. எலக்ட்ரொனிக்ஸ் பொருட்களின் உற்பத்தியில் தன்னுடைய "கைத்திறமை" யைக் காட்டி வந்த சீனா, இப்போது கோழி முட்டை தயாரிப்பிலும் திறமையைக் காட்டியுள்ளது.

கோழி முட்டையை கோழி மட்டும்தான் இட வேண்டும் என்பது இயற்கையின் நியதி. ஆனால் இப்போது சீனர்கள் போலி கோழி முட்டைகளை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டனர். ஏழு வகையான இராசாயனங்கள் கலந்தே சீனா முட்டை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

கல்சியம் கார்பனேட், ஸ்டார்ச், ரெசின், ஜெலட்டின், அலும் உட்பட மற்றும் சில இராசாயனங்களை கலந்தே சீனர்கள் முட்டை யினை தயாரிக்கின்றார்கள்

போலி முட்டை தயாரிக்க உதவும் கல்சியம் கார்பனேட் ஒரு பாத்திரத்திலும், மஞ்சள் கருவுக்கு நிறம் சேர்க்க மஞ்சள் வண்ணக்கலவையும், மஞ்சள் கரு மற்றும் வெள்ளைப் பகுதி உருவாக்கும் அச்சினையும் (நம்மட ஊர்களில் கல் அரியிற அச்சி மாதிரி) அச்சினை தயாரித்தே முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது.

இரசாயனங்களைக் கலந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட மஞ்சல் கரு அச்சில் ஊற்றப்படுகிறது. மஞ்சள் கருவின் மேலே கல்சியம் கார்பனேட் மற்றும் சில இரசாயனங்களின் உதவியால் வெள்ளைக்கரு உருவாக்கப்படுகிறது.

அதன் பின்னர் மஞ்சள் கருவைச் சுற்றி வெள்ளைப்பகுதி தயார். பின்னர் இது ஒரு மணி நேரம் காய வைக்கப்படுகிறது. பின் மெழுகில் தோய்த்தெடுக்கப்படும் போலி முட்டையின் மேல் செயற்கை ஓடு பொருத்தப்படுகிறது.

## மணமகன் தேவை.....

26 வயதுடைய யாழ் இந்து வேளாளர் மூலம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி மணமகளுக்கு வெளிநாட்டில் P/R உடைய மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

35 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) ராகினி நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அரச பணிபுரியும் மணமகளுக்கு அரச பணிபுரியும் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

28 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) பூரம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற ஆசிரியராக பணிபுரியும் மணமகளுக்கு வெளிநாட்டில் P/R உடைய மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

32 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (p) சதய நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய (சூ+செ) பட்டதாரி அரச பணி புரியும் மணமகளுக்கு அரச பணிபுரியும் மணமகன் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

30 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (S) உத்தரட்டாதி நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய (சூ+செ) மண மகளுக்கு சுயதொழில் அல்லது வெளிநாட்டில் P/R உடைய மணமகன் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

30 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (p) புறர்பூச நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அரச பணிபுரியும் மணமகளுக்கு அரச பணிபுரியும் அல்லது வங்கியில் பணியாற்றும் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

## மணமகள் தேவை

27 வயதுடைய யாழ் இந்து வேளாளர் அனுவு நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய சிங்கப்பூரில் சிவில் இஞ்சினியராக பணி யாற்றும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

34 வயதுடைய யாழ் இந்து வேளாளர் அத்தம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய கனடா P/R உடைய மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

30 வயதுடைய யாழ் இந்து வேளாளர் புறர்பூச நட்சத்திரம் செவ்வாய் குற்ற முடைய சுவீடனில் எலக்ரோனிக் இஞ்சினியராக பணியாற்றும் மண மகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

34 வயதுடைய யாழ் இந்து வேளாளர் சுவாதி நட்சத்திரம் செவ்வாய் குற்ற முடைய லண்டன் P/R உடைய மண மகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

29 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) சதயம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய கனடா சிற்றிசன் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

37 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) கார்த்திகை நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய (சூ+செ) கொழும்பில் தனியார் கம்பனியில் பணி யாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

34 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) சதயம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அரச வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி A/L படித்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

27 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம்(k) அத்தம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய சுவிஸ் நாட்டி லுள்ள மணமகனுக்கு வெளிநாட்டில் P/R உடைய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397




31 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) மகம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற கொலண்டில் பணி புரியும் மணமகனுக்கு வெளிநாட்டில் P/R உடைய மணமகள் தேவை.தொடர்புகளுக்கு:- 0778939397

47 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) உத்தராட நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய லண்டனில் சிவில் இஞ்சினியராக பணிபுரியும் மணமகனுக்கு BSC க்கு மேல் பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

28 வயதுடைய யாழ் கௌரவ குடும்பம் (குருகுலம் R.C வேதம்) பூராட நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அரச பணிபுரியும் மணமகனுக்கு உத்தியோகத்திலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள P/ R உடைய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

34 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (p) பூசம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய (சூ+செ) அரச பணிபுரியும் மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

35 வயதுடைய யாழ் இந்து விஸ்வகுலம் சித்திரை நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

27 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (N) திருவோணம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அரச பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

32 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (N) சுவாதி நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய சுயதொழில் புரியும் மண மகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

42 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (N) சதயம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய அரச பணிபுரியும் மண மகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

33 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (D) மகம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

37 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) ஆயிரியம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய எலக்ரோனிக் இஞ்சினியராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0778939397

27 வயதுடைய யாழ் இந்து கௌரவ குடும்பம் (k) அனுஷம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமுடைய தனியார் கம்பனியில் பணிபுரியும் மணமகனுக்கு உத்தியோகத்திலுள்ள மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:- 0778939397

## வடக்கு கடற்தொழிலாளர்களின் அடுப்பிற்குள் பூனை தொப்புல் கொடி உறவால் கடல் வளம் சூறை

2014 ல் மட்டும் வடக்கு கடலில் 17 ஆயிரம் மெற்றிக் தொன் மீனை இந்திய இழுவைப்படகினர் பிடித்து இந்தியாவிற்கு கொண்டு சென்றுள்ளனர்.


வடபகுதி கடலில் இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதனை கண்டித்து, வடமாகாண கடற் றொழிலாளர் இணையம், யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து அறவழிப் போராட்டத்தினை கடந்த 23ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தியது. "அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற் காக வடபகுதி கடலை விற்காதீர்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த போராட்டம் நடைபெற்றது.



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். கடற் றொழில் நீரியல் வளத் துறைத்தி ணைக்களத்திலிருந்து ஆரம்பமான இந்தப் போராட்டம், காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக கண்டி வீதிக்குச் சென்று, யாழ். மாவட்டச் செயலகத்தில் முன்பாக, போராட் டக்காரர்கள் தமது எதிர்ப்பினை வெளி யிட்டனர்.

பின்னர் யாழ் மாவட்டச் செய லகத்தில் மாவட்டச் செயலாளர் நாகலிங்கன் வேதநாயகனைச் சந்தித்து கலந்துரை யாடிய போராட்டக்காரர்கள், மகஜரொன்றையும் கையளித்தனர்.

அதன் பின்னர், மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ். இந்தியத் துணைத் தூதரகத் துக்குச் சென்ற போராட்டக்காரர் கள், தூதரக கொன் சலட் ஜெனரல் ஏ. நடராஜனுக்கும் மகஜரொன்றை கை யளித்தனர்.



இந்தப் போராட் டத்தில், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் க. சர்வேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

எத்தனை போராட்டங்கள் நடாத்தியும் இந்தியாவிலும் இலங்கையிலும் இரு தரப்பு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடாத்தியும் ஒன்றும் நடந்த பாடில்லை. கடந்த ஆண்டு மட்டும் இந்திய மீனவர்கள் வடக்கு கடற்பரப்பில் ஏறத்தாழ 17 ஆயிரம் மெற்றிக் டொன் மீன் பிடித்துள்ளனர்.

அத்துடன் இந்திய இழுவைப் படகுகளால் நமது மீனவர்களின் மீன் பிடி உபகரணங்களும் அழிக்கப்பட்டுள்ளன அதனால் கோடிக்கணக்கான ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்திய இழுவைப்படகுகளால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் கடற்தொழிலை கைவிட்டுள்ள சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளது. வடக்கு கடலில் உள்ள வளங்களை பயன்படுத்த முடியாத நிலையில் கடற்தொழிலாளர்களின் அடுப்பிற்குள் பூனை படுத்திருக்க தொப்புல் கொடி உறவுகள் வடக்கு வளத்தினை சூறையாடுகின்றனர்.

## பொருளாதாரத்தினை நேசிக்கும் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டியதும் யோசிக்க வேண்டியதும்.

கடந்த 2014 ஆண்டில் கடற்தொழில் சற்று விரிவடைந் தது. கடல் மீன் உற்பத்தியில் 3.0 சதவீதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் 2014 ம் ஆண்டு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு கடல் வளத்தினை இந்திய இழுவைப்படகுகள் அழித்து வரும் சூழலில் வடக்கு கடற்தொழிலாளர்கள் வாழ்வதாரத்திற்கே திண்டாடும் சூழலில் எவ்வாறு 3 வீதத்தால் கடல் உற்பத்தி அதிகரித்தன என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

நன்னீர் மீன்பிடி 13.2 சதவீதத்தால் அதிகரித்ததனையும் மீன்பிடி என்ற தலைப்பிற்குள் உள்ளடக்கப்பட்டே மீன் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

2014ல் மீன் உற்பத்தி 5 இலட்ச்சத்து 35 ஆயிரத்து 50 மெற்றிக் தொன்களாகும் இது 4.3 சதவீத அதிகரிப்பாகும். கடல் மீன் உற்பத்தியில் கரை கடந்த துறை 1.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந் திருக்கையில் ஏரி மீன்பிடியை உள்ளடக்கும் கரையோர மீன் உற்பத்தி 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக் கையில் தெரிவிக்கப்பட்டள்ளது.

கரை கடந்த மீன் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைந்த வளர்ச்சிக்கு கால நிலைமைகளை காரணம் காட்டுகிறது மத்திய வங்கி அதனை ஆய்வுக்குட்படுத்த வேண்டியது அவசிய மாகும்.

ஆழ்கடல் மீன் உற்பத்தியானது 2013 ம் ஆணடில் 40 சத வீதத்திலிருந்து அது 2014ம் ஆண்டில் ஒரு வீதத்தால் வீழ்ச்சியடைந் துள்ளதனை கவனத்தில் எடுக்க வேண்டும் எனவே கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு முழுவதும் பெரிய மீன் வகைகளின் விலைகள் தொடர்ந்தும் உயர்ந்த நிலையிலேயே இருக்கின்றன. ஆழ் கடல் மீன் உற்பத்திக்கு கால நிலையினை காரணம் காட்டும் மத்திய வங்கியின் அறிக்கையில் இலங்கையின் கடற்பரப்பில் குறிப்பாக வடக்கு கடலில் இந்திய இழுவைப் படகின் அச்சுறுத்தல் தொடர்பில் எவ்வித தகவல்களையும் தெரிவிக்கவில்லை. 5 இலட்ச்சத்து 35 ஆயிரத்து 50 மெற்றிக் தொன் மீனை இலங்கை கடற்தொழிலாளர்கள் உற்பத்தி செய்திருக்க இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவைப் படகில் 17 ஆயிரம் மெற்றிக் தொன் மீனை இந்திய மீனவர்கள் உற்பத்தி செய்திருக்கிறார்கள் என கடல்வள நிபுணர்கள் தெரிவித்துள்ள தனை சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

சிறிய மீனின் விலைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து குறைவாக விளங்கி கரையோர மற்றும் ஏரி மீன்பிடிகளில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

நன்னீர் மீன்பிடி துறையில் நன்னீர் மீன்பிடி ஏறத்தாழ 25 சத வீதத்தாலும் இறால் உற்பத்தி 16.3 சதவீதத்தாலும் அதிகரித்திருக் கையில் அலங்கார மீன்பிடி 76.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாண்டில் பின்னரைப்பகுதியில் வரட்சி நிலைமைகள் நன்னீர் மீன் உற்பத்தியை பாதித்தமையால் நன்னீர் மீன் உற்பத்தி பெரும்பாலும் இவ்வாண்டில் முதலரைப் பகுதியிலேயே இடம்பெற்றது.

நாட்டைச் சுற்றி கடல் வளத்தினை வைத்துக்கொண்டு 2014 ம் ஆண்டு மட்டும் 18 ஆயிரத்து 591 மெற்றிக் தொன் மீன்களை இறக்குமதி செய்து கடந்த அரசு சாதனை படைத்திருக் கிறது.

# அந்த டாக்குத்தர் கடவுள் தான்

சிறுகதை

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. வேதாவும் தனது பணியில் மூழ்கிபோயிருந்த வேளை கையடக்கத் தொலைபேசி சினுங்கியது யார் என எடுத்துப் பார்த்த வேதாவின் நெற்றி சுருங்கிப்போனது ஆம் யாழ்ப்பாணம் மிருசுவிலிலிருந்து வேதாவின் அம்மா தான் கோல் பண்றா.

ஓம் அம்மா சொல்லுங்க ஏதும் அவசரமே. வேதாவின் வார்த்தைகள் முடிவதற்குள் மறுமுனையில் அம்மா அழும் குரல் தெளிவாகக் கேட்டது. என்னம்மா சொல்லுங்கோ அழாதேயுங் கோம்மா என்னம்மா அப்பா வுக்கு ஏதேனும் வருத்தமே என்றான் மெதுவான குரலில் வேதா.

ஓமடா தம்பி... மீண்டும் அழுதபடியே அம்மா தொடர்கிறார் அப்பா நெஞ்சிக்க குத்துது என்று சொன்னாப்போல எங்கட சந்தி ஒட்டோக்கார தம்பிய பிடிச்சி ஆசுப்பத்திரிக்கு கொண்டுவந்தன் டாக்குத்தரவை உடன வாட்டல மறிச்சிப்போட்டினம் எனக்கு பயமா கிடக்கு பெரியவனுக்கு அடிச்சன் அவன் போன் எடுக்கேல்ல அதான் உனக்கு எடுத்தனான் என்றார் வேதாவின் அம்மா அழுதபடியே லண்டனில் இப்ப சாமம் அம்மா அதான் அண்ணா போன் எடுக்கேல்ல போல நான் அண்ணாவுக்கு அடிச்சி சொல்லுறன் . நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம் நீங்கள் போனை வையுங்கோ நான் கொஞ்ச நேரத்தில எடுக்கிறன் என போனை துண்டித்த வேதா அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அப்பா செல்லையா பற்றிய நினைவுகள் சில நிமிடங்கள் வரை வேதாவின் எண்ணத்தில் ஓடிக்கொண்டிருந்தது. மண்ணையும் மழையையும் மட்டுமே நம்பி வாழும் ஒரு விவசாயியே செல்லையா ஆகும். வேதா வெளிநாடு போய் சேரும் வரை அப்பா நித்திரை கொண்டதனையோ அல்லது சுகயீனம் என ஓய்வு எடுத்ததையோ ஒரு நாள் கூட கண்டதில்லை. இரண்டே பிள்ளை கள் தான் வேதாவும் அவனது அண்ணன் சங்கரும் வேதா அவுஸ்ரேலி யாவில் சங்கர் லண்டனில்.

இருவரையும் சுடச்சுட பாலை கையில் வைத்துக் கொண்டு காலையில் அம்மா எழுப்புவார். எழும்பி பாலை குடிச்சுப் போட்டு கெதியா பள்ளிக்கூடம் வெளிக் கிடுங்கோ கொப்பர் கத்தப்போறார் என்பார் அம்மா. அண்ணனுக்கும் தம்பிக்கும் அம்மாவின் பழகிப் போன வரிகள் அவை.

ஒருவாறு இருவரும் பள்ளிக்கூடம் வெளிக்கிட்ட பின்னர் தோட்டத்திற்கு தண்ணீர் இறைச்சிக்கொண்டிருக்கும் அப்பா வுக்கு அம்மா சிக்னல் கொடுப்பா பெடியல் வெளிக் கிட்டாங்கள் வாங்கோவன் அப்பா கொண்டு போய் விடுங்கோ என்றதும் வழமைபோல வெளிக்கொடியில் கிடக்கிற சேட்டை எடுத்து பட்டினை பூட்டியும் பூட்டாமலும் போட்டுக்கொண்டு இருவரையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு பாடசாலையில் விடுவார். தனக்காகவும் அண்ணனுக்காகவுமே வாழ்க்கையை வாழ்ந்து முடித்தவர் தான் அப்பா.


அண்ணனான சங்கர் ஏ. எல் டெஸ்ட் எழுதும் போது ஒருநாள் இந்தியன் ஆமி அண்ணனுக்கு அடிச்சதோட அப்பா கலங்கிப் போனார் இனி இவங்கள இஞ்ச வைத்திருக்க கூடாதென எல்லாத் தையும் வித்து கடனும் வாங்கி இருவரையும் வெளிநாட்டிற்கு அனுப்பி போட்டார். அதற்கு பிறகு தான் அப்பா நின்மதியா சாப்பிட்டவர் என்று அம்மா அடிக்கடி சொல்லுவா.

பழைய நினைவுகளில் சிறிது நேரம் முழ்கிப் போயிருந்த வேதா உடன் மிருசுவிலில் இருக்கும் தனது வகுப்பு தோழனான நண்பனுக்கு கோல் எடுத்து அப்பாவின் நிலையை விளக்கினான்.

மச்சான் ஒன்றும் யோசியாத நான் உடன ஹொஸ்பிட்டல் போய் என்ன என்று பார்த்திட்டு உனக்கு அடிக்கிறன் என்றான் நண்பனான வெற்றிநிலவன்.

மீண்டும் வேதாவுக்கு கோல் வந்தது. ஆம் வெற்றி நிலவன் தான் லைன்ல. வேதா பதட்டதுடன் என்ன.. என்னவாம் மச்சான் அப்பாவுக்கு?
அப்பா மச்சான் உடம்பை கவனிக்கேல்ல போல கிளினிக் குகளுக்கும் ஒழுங்கா போக இல்லைப் போல உடனடியா பைபாஸ் செய்யோனுமாம் என்று டொக்டர் சொல்றார் உடன இருதய சத்திர சிகிச்சை செய்யாவிட்டால் கஸ்ட்டம் தான் என்றான் நண்பனான வெற்றிநிலவன்.

எவ்வளவு செலவு என்றாலும் பரவாயில்லை மச்சான் உடன கொழும்புக்கு அப்பாவை கொண்டு போக ஏற்பாட்டை செய்யன் பிளீஸ்




உனக்கு என்ன விசரே எங்கட யாழ்ப்பாணத் தில நொதன் சென்றல் ஹொஸ் பிட்டலில் பைபாஸ் ஒப்பரேசன் வடிவாய் செய்யலாம் சரியான பாதுகாப்பும் கூட நொதன் சென்றல் ஹொஸ்பிடலின்ற செயாமன் சாமி ஐயாக்கு 80 வயதில இப்ப போன மாதம் தான் பைபாஸ் செய்தது என்றால் பாரன்றாப்பா. அவரின்ர வசதி வாய்ப் பிற்கு அமெரிக்கா விற்கோ நீ இருக்கிற அவுஸ்திரேலியா வுக்கோ போய் இருதய சத்திர சிகிச்சை செய்திருக்கலாம் ஆனால் நொதன் சென்றல் ஹொஸ்பிடலில் இருக்கிற நம்பிக்கையில் இஞ்சையே ஒப்பரேசன் முடிஞ்சு இப்ப ஆள் வேலைக்கும் திரும்பிட்டார்.
பேந்தென்ன உடன நொதன் சென்றல் ஹொஸ்பிட்டலில் ஒழுங்கு படுத்து மச்சான் அதோட நொதன் சென்றல் ஹொஸ்பிட்டலின்ற அட்மின்னின்ற நம்பரையும் எனக்கு ஒருக்கா அனுப்பு மச்சான். (தொடர்ச்சி 13ம் பக்கத்தில்)

**தாமரைச்செல்வன்**

# அரிசி விலை அதிகரித்தமை ஏன்? குத்தரிசி 80 ரூபா சம்பா அரிசி 90 ரூபா

கடந்த ஆண்டு நெல் உற்பத்தி வரட்சியான கால நிலைமைகள் காரணமாக 27 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. இது இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் சிறுபோக காலங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளால் ஏற்பட்ட குறைந்த விளைச்சல் காரணமாக 2014இல் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2013 ம் ஆண்டில் ஒரு எக்டேயருக்கு 4392 கிலோ கிறாமாக இருந்த நெல்லுற்பத்தியானது 2014 ம் ஆண்டு ஒரு எக்டேயருக்கு 4264 கிலோ கிறாம்களாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2013 ம் ஆண்டு 10 இலட்ச்சத்து 67 ஆயிரத்து 338 எக்டேயர்கள் நெற் செய்கை பண்ணப்பட்டது. 2014 ம்ஆண்டு 79 இலட்ச்சத்து 2 ஆயிரத்து 947 எக்டேயர்களாக நெற் செய்கை மட்டுப்படுத்தப்பட்டதும் நெல்லுற்பத்தியில் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

35.5 சதவீத வீழ்ச்சியுடன் மிகவும் பாதிக்கப்பட்ட பருவகாலமாக சிறுபோகம் விளங்கும் அதே வேளை பெரும்போகம் 21.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இதனால் 2014 இல் அரிசி உற்பத்தி 2.1மில்லியன் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2013 இற்கான 2.9 மில்லியன் மெற்றிக் தொன்கள் கொண்ட மதிப்பிடப்பட்ட' உற்பத்தியை விட 27.1 சதவீத வீழ்ச்சியாகும்.

2014இல் அரிசி உற்பத்தியானது உள்நாட்டு நுகர்வின் 11 மாதங்களுக்கு மாத்திரமே பூர்த்தி செய்யப் போதுமானது. 2014இல் நெல் வழங்களிலான பற்றாக்குறை அரிசியின் சில்லறை விலைகளை அதிகரித்துள்ளது. அரசாங்கம் அரிசி விலைகளை உறுதிப்படுத்து வதற்கு வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் இது இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் வழங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டது.

2014 ம் ஆண்டு திறந்த சந்தையில் நெல்லின் விலையைவிட நெல் திட்டத்தின் கீழ் கொள்வனவுக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்ட நெல்லின் விலையைவிட திறந்த சந்தை விலை அதிகரித்துக் காணப்பட்டது.

சம்பா மற்றும் நாட்டரிசியின் சராசரி சில்லறை விலைகள் 2014 இல் முறையே 16.3 சதவீதத்தாலும் அதிகரித்தன இதனால் அரசாங்கம் அரிசி விலைகளிலான அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பல வழிமுறைகளை ஆரம்பித்தது. இவை அரிசி இறக்குமதிகள் மீதான தீர்வையின் குறைப்பு மற்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் அரிசியின் மேலதிக இருப்பைப் பேணுவதை உள்ளடக்குகின்றன.


இதன் படி 2014இல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான பயனுறுதியான தீர்வை வீதம் கிலோ கிறாமுக்கு 25 ரூபாவிலிருந்து ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டதால் 2014இல் மொத்த அரிசி இறக்குமதிகள் 2013 இன் தொடர்பான காலப்பகுதியின் 23 ஆயிரம் மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் இவ் ஆண்டு 6 இலட்ச்சம் மெற்றிக் தொன்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**வழவுக்கரசி**
**செட்டிக்குளம், வவுனியா**

நாங்கள் அரிசி வேண்றது இல்ல தம்பி எனக்கு அரிசி என்ன விலையென்று தெரி யேல்ல எங்களுக்கு கமம் கிடக்கு. ஆனால் நாங்கள் நெல்லு விக்கேக்க குறைஞ்ச விலைக்கு தான் எடுத்தவை என்று மகளும் மருமகனும் போன காலபோக நேரம் கதைச்சவை என்றார் வடிவுக்கரசி அம்மா

என்ன ராசா செய்யிறது அரிசி விலை மட்டுமே ஏறுது எல்லாம் விலை யாத்தான் கிடக்கு முந்தி யென்றா 100 ரூபா கொண்டு போனா 5 நாளுக்கு



**சரஸ்வதி உரும்பிராய்**

தேவையான சாமானை வாங்கியறலாம் இப்ப ஏலுமே? நாங்கள் விற்கிற பாலை விட உந்த போத் தலில் தண்ணிய விட்டு புரிச்சுக்குள்ள வச்சிப் போட்டு விக்கி றாங்கள் அதுவும் பாலை விட கூட காசுக் கெல்லே விக்கினம் உந்த லோங்ஸ் போட்ட பெடி பெட்டையலும் அத வேண்டி குடிக்கினம் தானே. காலம் மாறிப் போச்சு. என்று சொல்லியப்படி எமது பதிலுக்கு காத்திராமல் கறந்த பாலுடன் வீட்டிற்குள் சென்று விட்டார்.

போன முறையைவிட இந்த முறை அரிசி விலை கூடிப்போச்சுத் தான் என்ன செய்யிறது என்ன விலையென்றாலும்



**மகேஸ்வரி**
**(கிளி/ வன்னேரிக்குளம்)**

வாங்கத் தானே வேணும். புது அரசாங்கம் வந்து சில சாமான்களுக்கு வில குறைச்சவை அத மாதிரி இதுக்கு மேல என்றாலும் அசியின்ற விலைய கூட்டாமல் இருந்தால் நல்லம் என்கிறார் மகேஸ்வரி




## திருகோணமலை தனியார் பேரூந்து நேர அட்டவணை

| புறப்படும் நேரம் திருகோணமலை | யாழ்ப்பாணம் |
|---|---|
| 8.00am 11.45 am | 1.00 pm |

| புறப்படும் நேரம் திருகோணமலை | தங்கலை |
|---|---|
| 7.00am | 6.00pm |

| புறப்படும் நேரம் திருகோணமலை | கண்டி |
|---|---|
| 4.00am | 6.00am |
| 6.45am | 9.15am |
| 10.15am | 1.45pm |
| 2.45pm | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | கொழும்பு |
|---|---|
| 12.15Pm | 1.10am |
| 1.40am | 2.15am |
| 3.00am | 4.00am |
| 5.00am | 5.45am |
| 8.00am | 9.00am |
| 10.00am | 11.00am |
| 12.00pm | 12.45pm |
| 2.00pm A/C | 3.45pm |
| 5.15pm | 8.30pm |
| 10.00pm A/C | 10.30pm |
| 11.00 Super luxary | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | கல்முனை |
|---|---|
| 3.15am | 4.00am |
| 4.30am | 5.00am |
| 5.30am | 6.30am |
| 6.50am | 7.30am |
| 8.00am | 8.30am |

| புறப்படும் நேரம் திருகோணமலை | அக்கரைப்பற்று |
|---|---|
| 9.00am | 9.30am |
| 10.00am | 1.00pm |
| 2.00pm | 2.30pm |
| 4.00pm | 4.30pm |
| 5.15pm | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | அம்பாறை |
|---|---|
| 10.30am | 11.00am |
| 11.30am | 12.00pm |
| 12.30pm | 3.00pm |
| 3.30pm | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | அனுராதபுரம் |
|---|---|
| 7.00am | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | குருநாகல் |
|---|---|
| 2.30am | 3.20am |

புறப்படும் நேரம் திருகோணமலை அம்பாந்தோட்டை - 7.00pm

புறப்படும் நேரம் திருகோணமலை பதுளை - 7.30pm

## திருகோணமலை அரச பேரூந்து நேர அட்டவணை

| புறப்படும் நேரம் திருகோணமலை | கொழும்பு |
|---|---|
| 3.30 am | 4.30 am |
| 5.30 am | 6.30 am |
| 7.30 am | 8.30 am |
| 9.30 am | 10.30 am |
| 11.30 am | 2.00 pm |
| 4.30 pm | 11.15pm |

| புறப்படும் நேரம் திருகோணமலை | யாழ்ப்பாணம் |
|---|---|
| 1.30 am | 3.30 am |
| 4.30 am | 6.20 am |
| 6.50 am | 9.30 am |
| 12.45 pm | 2.30 pm |
| 3.20 pm | 5.30 pm |
| 8.00 pm | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | கண்டி |
|---|---|
| 3.00 am | 4.45 am |
| 6.00 am | 6.15 am |
| 7.10 am | 7.15 am |
| 7.45 am | 8.15 am |
| 8.30 am | 9.30 am |
| 9.45 am | 10.45 am |
| 11.00 am | 11.45am |
| 12.30 pm | 1.00 pm |
| 1.30 pm | 2.30 pm |
| 3.30 pm | 4.00 pm |
| 4.30 pm | 6.00 pm |
| 6.50 pm | |

| புறப்படும் நேரம் திருகோணமலை | தம்பலகமம் |
|---|---|
| 6.45 am | 8.15 am |
| 10.15 am | 12.10 pm |
| 2.00 pm | 4.50 pm |

| புறப்படும் நேரம் திருகோணமலை | வவுனியா |
|---|---|
| 5.45 am | 7.30 am |
| 8.30 am | 11.15 am |
| 12.50 pm | 4.15 pm |
| 6.00 pm | |

| புறப்படும் நேரம் திருகோணமலை யாழ்ப்பாணம் முல்லை ஊடாக | |
|---|---|
| 1.30pm | 5.10pm |

## வேலை வாய்ப்புகள்

Customer Care Executive
We are looking applicants for our customer support desk. Applicants must fluent in English & very good knowledge about MS Office & Internet.If you Interest You can call 0115247608
Address
710/A, Thorana Junction, Kandy Road. Kelaniya.
Please Apply Soon Via
Chandikakg@gmail.com

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்தில் பில் போடக்கூடிய வரும் வாடிக்கையாளருடன் நட்புடன் உரையாடக் கூடிய ஆண் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொடர்பு இலக்கம்: 021 2222567

வேலை வகை:- சிப்பந்திகள்
அனுபவம் தேவையில்லை
ஆங்கிலம் பேசத் தெரிந்திருத்தல் வரவேற்கப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கபடும்
தொடர்பு கொள்ள வேண்டிய
இல. 0777709790
அல்லது சுயவிபரத்தினை கீழ்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.
prabadaran@gmail.com

வேலையின் வகை:- Data Entry Operator
தகுதிகள்:- க. பொ. த. உயர்தரம்
இணைய அறிவு குறிப்பாக மின்னஞ்சல்
தகவல் தொழில்நுட்பம்
பயோ டேட்டா அனுப்ப வைக்க வேண்டிய
மின்னஞ்சல்:- jobcompany91@gmail.com

வேலை வகை:- சாரதி
(21 அடி நீளமான லொறி)
சம்பளம் 700 ரூபா நாளொன்றுக்கு 20 வீத கொமிசன் வழங்கப்படும்.
மாதம் ஒன்றுக்கு 50 ஆயிரம் உழைக்க உத்தரவாதம். ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். 0777326454

வேலை வகை:- HR Managers (ஆண்கள் பெண்கள்) Aleading company in srilanka is in urgent need of Hr managers. Anyone 18 or above completed G. C. E. O/L can apply. No need experience Should have basic knowledge in IIT. English, Mathematics. Candidates with above qualifications can apply. Salary is negotiable and attractive,. Please forward your CV to get jobs 213 @gmail.com with you name, address,email and telephone number
Please mention the job you are applying in the email subject

## வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் பழைய பொலிஸ்நிலைய வீதியில் வீடு விற்பனைக்குண்டு.
3 படுக்கையறைகள், 2 குளியல் அறைகளுண்டு, தண்ணீர்வசதி, மின்சார வசதி உண்டு, வீட்டின் அளவு 2000 சதுர அடிகள், காணியின் அளவு 3.75 பேர்ச்சேஸ் விலை பேசி தீர்மானிக்கப் படும். தொடர்பு கொள்ள வேண்டிய இல. 0112636362

காணி விற்பனைக்கு - 20 பேர்ச்
முகவரி - யாழ் மருத்துவபீடம் முன்பாக, கொக்குவில் பிரதேச சபைக்கருகில்,
விலை 200, 000
தொடர்பு கொள்ள வேண்டிய
இல. 0773058782

கட்டிடத்துடன் கூடிய காணி விற்பனைக் குண்டு யாழ் நகரின் மையப்பகுதி போதனா வைத்தியசாலையில் இருந்து 5 நிமிட நேர நடைதூரம். இலங்கை வங்கி, வேம்படி மகளிர் கல்லூரி தொடரூந்து நிலையம் ஆகியன அருகில் உள்ளது.
காணியின் அளவு 1 பரப்பு
விலை ரூபா 8, 500,000
பேசித்தீர்மானிக்கலாம் 077 433 5079

நிலவகை குடியிருப்பு காணி
நல்லூர் கோவிலில் இருந்து 500 மீற்றர் தூரத்தில (பிரதான வீதி, கோப்பாய்.)
நில அளவு 80 பேர்ச்
விலை ரூபா 3500.00
தொடர்புகளுக்கு: 0773058782

யாழ்நகரில் வீடு விற்பனைக்கு
படுக்கையறைகளின் எண்ணிக்கை 5
குளியல் அறைகளின் எண்ணிக்கை
வீட்டின் பருமன் 21 சதுர அடிகள்,
நில அளவு 25 பேர்ச்
விலை- 11.000.000
தொடர்புகளுக்கு: 0773586563

திருகோணமலையில் காணி விற்பனைக்கு
நிலத்தின் வகை - வர்த்தக குடியிருப்பிற்குரியது, நிலத்தின் வகை - 200 பேர்ச்
விலை: 115,000
தொடர்புகளுக்கு: 071 836 7003, 0717758650, 0772498828

வர்த்தக நிலையம் கட்டிடம் விற்பனைக்கு
பிரதான வீதி, இறக்கண்டி, நிலாவெளி, திருகோணமலை.
பருமன் - 16 சதுர அடி
விலை: 6,000.000
தொடர்புகளுக்கு: 0778191201, 0778880248

காணி விற்பனைக்குண்டு
முகவரி - புதிய வீதி, அலஸ்தோட்டம், திருகோணமலை.
நிலத்தின் அளவு 20 பேர்ச்
தண்ணீர் வசதியுள்ளது.
விலை - 5,500,000 பேசி, தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 351 9119

காணி விற்பனைக்குண்டு
முகவரி - 8ம் கட்டை, நிலாவெளி திருகோணமலை.
நிலத்தின் அளவு 80 பேர்ச்
நிலவகை - விவசாயம், வர்த்தகம்
விலை - பேசி, தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 026 222 4722, 0778138821

காணி விற்பனைக்குண்டு
முகவரி -பெரியகுளம், நிலாவெளி திருகோணமலை.
நிலவகை - குடியிருப்பிற்குரியது
நில அளவு - 2 ஏக்கர்
தொடர்புகளுக்கு: 071 444 2879, 026 222 2955

காணி விற்பனைக்குண்டு
முகவரி -சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா
நிலவகை - விவசாயம்
நில அளவு - 5 ஏக்கர்
விலை பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 633 3110

வீடு விற்பனைக்கு
முகவரி -இல 80, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா
3 படுக்கையறை, 1குளியலறை, வீட்டின் அளவு 2000 சதுர அடி,
நில அளவு - 30 பேர்ச்
விலை 6,000,000 (பேசித் தீர்மானிக்கலாம்)
தொடர்புகளுக்கு: 077 245 4170

காணி விற்பனைக்கு
முகவரி -107, சாம்பல் தோட்டம், நெலுக்குளம், வவுனியா
நிலவகை - விவசாயம்
நில அளவு - 16பேர்ச்
விலை 160,000
தொடர்புகளுக்கு: 077 635 4279

காணி விற்பனைக்கு
முகவரி -ஏ9 வீதி, தாண்டிக்குளம், வவுனியா
நிலவகை - வர்த்தக குடியிருப்பு, மற்றவை
நில அளவு - 01 ஏக்கர்
விலை 1,500,000
தொடர்புகளுக்கு: 077 591 5553

## விலங்குகள், செல்லப்பிராணிகள்

வகை - நாய், இனம்- ஜேர்மன் செப்பேட்
வயது - 30 நாட்கள் இடம் - யாழ்நகர்,
விலை - 18,000
தொடர்புகளுக்கு: 0774052364

வகை - பறவைகள், இனம்- Finches
இடம் - யாழ்நகர், விலை - 850 ரூபா
தொடர்புகளுக்கு: 07755500974

வகை - பறவைகள், இனம்- கோழி
வயது - 5 மாதம், விலை - 2000 ரூபா
தொடர்புகளுக்கு: 0778448161

வகை - பறவைகள், இனம்- Findel good
விலை - 6500 ரூபா
இடம் - திருகோணமலை,
தொடர்புகளுக்கு: 0774849430

வகை - பறவைகள், இனம்- Gepsan
விலை - 2500 ரூபா
இடம் - திருகோணமலை நகர்,
தொடர்புகளுக்கு: 0758086545

# நினைவுகளின் ஆலயமாக மாற்றமில்லாத மலாயன் கபே அன்றும் இன்றும் அப்படியே

நல்லூர் கந்தனின் திருவிழா என்றால் யாழ்ப்பாணத்திற்கு புலம் பெயர் உறவுகள் படையெடுத்து விடுவது வழமை. திருவிழா காலங்களில் பெரும்பாலான இந்துக்கள் மூன்று வேளையும் சைவம் தான். அதிலும் மலாயன் கபேயில் வரிசையில் நின்று சாப்பிடும் அளவுக்கு வாடிக்கை யாளர்கள் கூட்டம் .

சைவ பாரம்பரியத்தின் உணவகமாக இருக்கின்ற *மலாயன்* கபேக்குள் உள்ளிட்டேன். சோறு உண்ண உள்யேயும் ஏனைய பலகார உணவுகளுக்கு வெளியேயும் என இரண்டு பிரிவாக பிரித்து வைத்துள்ளமை எனக்கு தெரிந்ததால் நான் உள்ளே சென்றேன். இடியப்பம் பிட்டு வடை போன்ற உணவுகள் சாப்பிடுகின்ற வெளிப் பகுதியில் சுத்தம் செய்யப்பட்டு மேசை மீது கதிரைகள் அடுக்கப்பட்டு இருந்தன.




ஒருவர் (கண்டிப்பாக புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்) இரண்டு வெள்ளைகளோடு வந்தார். மலாயன் அருகில் இருந்த வெள்ளைகளிடம் ஏதோ சொன்னார். அருகில் இருந்த தூணைத் தொட்டுப்பார்த்தார் பின்னர் மேசையில் இருந்த கதிரையை கீழே இறக்கினார்.

அப்போது உள்ளிருந்து ஒரு குரல்.. ஐயா ஐயா கதிரையை இறக்க வேணாம் உள்ளுக்கு போய் சாப்பிடுங்கோ பெடியலும் எல்லாம் நல்லூரானிட்ட போட்டாங்கள் நாங்கள் கொஞ்ச பேர் தான் இருக்கின்றோம் உள்ள வாங்கோ உள்ள வாங்கோ என்றார் வெயிட்டர். உடன கதிரையை இறக்கிக் கொண்டிருந்த ஐயா மெதுவான குரலில் சொன்னார் நேரம் போனால் பரவாயில்லலை தம்பி நான் பொறுத்திருக்கிறன் ஆனால் இந்த தூணுக்கு கிட்ட இருந்து தான் சாப்பிட போறன்.

மீண்டும் வெயிட்டரின் குரல்.. ஐயா சொன்னாக் கேளுங்கோ உள்ள வாங்கோ உடன சாப்பிடலாம். மீண்டும் அவர் தயங்கியபடி இல்ல இல்ல நான் பொறுமையா இருந்து இந்த தூணுக்கு கிட்ட இருந்து சாப்பிடுறன் பிளீஸ் தம்பி என்றார்.

இதனை கவனித்துக்கொண்டிந்த முகாமையாளர் நவரட்ணராஜா சதீஸ்குமார் அருகிலே சென்றார் என்ன சாப்பிடப் போறீங்க ஐயா என்றார் வந்திருந்த ஐயா சொன்னார் இடியப்பமும் வடையும் என்றார்.

முகாமையாளரே பரிமாறினார். தம்பி நீங்க கனகாலமா மலாயன் கபேயில வேலை செய்யிறியளோ என கேள்வி கனையை தொடுத்த படி இதில கொஞ்ச நேரம் குறை நினைக்காம இருங்கோவன் என்றார்.

முகாமையாளரும் அமர்ந்தார். நான் சென்றல்ல தான் படிச்சனான் அம்மா அப்பாவுக்கு ஒரே பிள்ளை மலாயன் கபேக்கு நெடுக வந்து சாப்பிடுகிற நாங்கள் இந்த தூணுக்கு கிட்ட தான் என்னை நடுவில இருத்திப் போட்டு அம்மாவும் அப்பாவும் இரண்டு சைட்டிலயும் இருந்து எனக்கு தீத்தி விடுறவை என்றவரின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டுகிறது.

அழுத படியே தொடர்கிறார் இதுல இப்ப இருந்து சாப்பிடேக்க என்ற இரண்டு பக்கமும் அம்மாவும் அப்பாவும் இருக்கிற மாதிரி கிடக்கு பின்னர் நோர்வேஜிய மொழியில் கண்ணீர் கொட்ட கொட்ட இரண்டு வெள்ளையர்களுக்கும் விளக்குகிறார். பின்னர் எழுந்து அருகில் இருந்த தூணை சுற்றி வந்து காட்டுகிறார். இடியப்பத்தை அம்மாட கையால வாயில வாங்கிக்கொண்டு தூணைச் சுற்றி வருவாராம் சிறுவனாய் இருந்த போது என பழைய விடயங்களை ஞாபகப்படுத்திக் கொண்டார். அதே கதிரை மேசை அதே தேக்கு அலுமாறி அதே பழைய இங்லான்ட் மின்விசிறி வாழையிலை என வியந்து போனார் வெள்ளையர்கள் வரும் அவரது மகளும் மகனுமாம் வெளிநாட்டுப் பெண்ணை தான் திருமணம் செய்திருக்கிறார். பிளைகள் இருவரும் வைத்தியர்களாம்.

இரு வெள்ளையர்களும் ஆச்சரியத்துடன் 60 வருடமாக அப்படியே இருக்கிறதா என வியந்தனர். மாற்றம் என்பதே மாறாதது என்பதனை பொய்ப்பித்திருக்கிறீர்கள் தம்பி என நெகிழ்வுடன் கூறிய ஐயா சொன்னார் இந்த ஞாபகத்திற்கே கோடி ரூபாய் கொடுக்கலாம் தம்பி என்றார். அப்போது தான் முகாமையார் நவரட்ணராஜா சதீஸ்குமார் மெதுவாக வாய் திறந்தார் நானும் எத்தனையோ தடவை முதலாளியிடம் கேட்டுப்பார்த்து விட்டேன் குளிரூட்டி எல்லாம் பூட்டி கதிரைகள் மேசைகள் எல்லாம் சில்வரில போடுவம் என்று முதலாளி இன்றைய நவீன முறையில் மலாயன் கபேயை அழகு படுத்தவதனை தவிர்த்தே வந்திருக்கின்றார். உங்களை போல நிறைப் பேர் வந்து பழைய நினைவுகளை ஞாபகபட்டுத்திவிட்டு போகிறார்கள் என முகாமையாளர் சதீஸ்குமார் விளக்கினார். **(தொடரும் .....)**


**தாமரைச்செல்வன்**

# பல்கலைக்கழக கல்வியை இடைநடுவில் கைவிட்டவரே உலகின் முதற் பணக்காரன்

2015ஆம் ஆண்டிற்கான செல் வந்தர்கள் பட்டியலில், முந்தைய ஆண்டை விட 3.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான அதிக சொத்து களுடன் மொத்தம் 79.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள சொத்துகளுக்கு சொந்தக் காரராக பில் கேட்ஸ் அறிவிக்கப் பட்டுள்ளார்.

கடந்த 21 ஆண்டுகளில் வெளியான போர்ப்ஸ் செல்வந்தர்கள் பட்டியலில் பில் கேட்ஸ் 16-வது முறையாக முதல் இடத்தை தக்க வைத்து கொண்டுள்ளது குறிப் பிடத்தக்கது.

ஒரு சாதாரண சட்டத்தரணிக்கும் பல்கலை கழக ஆசிரியர் ஒருவருக்கும் 1955 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ம் திகதி மகனாக பிறந்த பில்கேட்ஸ் கணிதத்திலும் எண்களிலும் ஆராய்வதில் அதிக ஆர்வ முடையவராக இருந்தார்.



பில்கேட்சுக்கு இரண்டு சகோதரிகளும் உண்டு. மிகவும் கூச்ச சுபாவமுடைய பில்கேட்ஸ் யாரோடும் பழக மாட்டார் சகோதரிகளோடு கூட அவ்வளவாக அலவலாவுவது இல்லை. எப்போதும் தனிமையையே விரும்பினார்.

பில்கேட்சுக்கு ஒரு நண்பன் உண்டு அவர் தான் போல் ஆலன் அவர் பில்கேட்சைவிட இரண்டு வகுப்பு அதிகம் படிப்பவர். இருவரும் ஒன்றாக இருப்பார்கள் கதைப்பார்கள் விவாதிப் பார்கள் சேர்ந்தே திரிவார்கள்.

1977ம் ஆண்டு அமெரிக்காவின் ஆல்புகர்க் என்ற நகரத்தில் தனது 20 வயதில் மிகப்பெரிய அடுக்கு மாடித் தொகுதியில் எட்டாவது மாடியில் ஒரு சிறிய அறையில் மைக்கிரோ சொப்ட் நிறுவனத்தினை ஆரம்பித்து கணனிதுறையில் இன்று கொடி கட்டி பறப்பவரே பில்கேட்ஸ் என்ற உலகின் முதற் பணக்கார் ஆவார். உழைப்பும் முயற்சியும் அவரை உலகில் உயர்த்தியுள்ளது. இப்போது பல சமூக சேவைகளிலும் பில்கேட்ஸ் ஈடுபட்டு வருகிறார்.

## செக்குமாடும் வேலையில்லா பட்டதாரியும்

பல்கலைகழக பட்டதாரி ஒருவர் கிராமத்துக்கு போனார். அங்கே ஒரு செக்குமாடு மட்டும் தனிய செக்கு சுத்திக் கொண்டு இருந்தது. பட்டதாரிக்கு ஆச்சரியமாக இருந்தது. பக்கத்தில் கிடுகு வீட்டிற்குள் ஒரு விவசாயி சாப்பிட்டுக் கொண்டு இருந்தார் இனி விவசாயிக்கும் பட்டதாரிக்கும் இடையிலாக உரையாடல்

**பட்டதாரி :** மாடு மட்டும் தனிய செக்கு சுத்திக்கொண்டு இருக்கிதே..?

**விவசாயி:** அது பழகினமாடு தம்பி...அது தானாவே சுத்தும்

**பட்டதாரி :** நீங்க உள்ளே வந்த உடனே மாடு சுத்துறத நிப்பாட்டிப் போட்டு தென்றால் எப்படி கண்டுபிடிப்பீங்க..?

**நகைச்சுவை**

**விவசாயி:** மாட்டின்ற கழுத்தில ஒரு சலங்கை இருக்கு தம்பி.., சுத்துறதை மாடு நிப்பாட்டி போட்டுதென்றால் அந்த சலங்கை சத்தம் வராது.. அதை வச்சி கண்டுபிடிச்சி போடுவன்

**பட்டதாரி :** மாடு சுத்துறதை நிப்பாட்டிப் போட்டு ஒரே இடத்துல நின்று..., தலைய மட்டும் ஆட்டினா..! அப்ப எப்படி கண்டுபிடிப்பீங்க..?

**விவசாயி:** இதுக்குதான் தம்பி, நான் என்ற மாட்டை பல்பலைகழகத்திற்கு அனுப்பி பட்டதாரியாக் ககேல்ல கண்டியலோ

## முற்பகல் செய் பிற்பகல் விளையும்

பேக்கரி கந்தையாண்னையும் ஐகோ செல்லையாண்னையும்

பேக்கரி கந்தையா அண்ணன்ற பேக்கரிக்கு ஐகோ சப்ளை செய்யும் செல்லையா அண்ணயில் வெகுவாக சந்தேகம். தன்னை செல்லையா ஏமாற்றுவதாக வருத்தம் இருந்தது.

அரை கிலோ ஐகோ என்று செல்லையாண்ண தருவது அரை கிலோவே இல்லை. எடை குறைவாக இருக்கிறது என்று பேக்கரி கந்தையா அண்ண குற்றம் சாட்டினார்.

இரண்டு பேருக்கும் சண்டை முற்றி ஒரு நாள் நீதிமன்றத்திற்கு வழக்கு வந்திட்டு.

செல்லையா அண்ணயின்ற ஐகோ பொட்டலத்தினை நீதிபதி முன் நிறுத்துக் காட்டினார் பேக்கரி கந்தைய அண்ணன். 'பாருங்கள் 450 கிராம் தான் இருக்கிறது. இப்படித்தான் என்னை பலமுறை ஏமாற்றி இருக்கிறார். இவரை தண்டியுங்கள்" என்று ஆவேசப்பட்டார் பேக்கரி கந்தையா அண்ணா.

நீதிபதி ஐகோ வியாபாரியான செல்லையா அண்ணனைப் பார்த்து "என்ன சொல்கிறீர்கள்? ஒவ்வொரு முறையும் 50 கிராம் குறைவாக வியாபாரம் செய்யலாமா? அது குற்ற மில்லையா? என்று கேட்டார் நீதிபதி.

ஐயா என்னிடம் எடைக்கல் கிடையாது. அதனால் 500 கிராம் எடையுள்ள பொருள் ஏதேனும் ஒன்றை எடைக் கல்லுக்குப் பதிலாக பயன்படுத்துவது வழக்கம். பெரும்பாலும் இவரது பேக்கரி பாணைத் தான் வாங்குகிறேன்.

அதையே ஐகோ நிறுப்பதற்கும் பயன்படுதுவேன். பாணின் எடை 500 கிராம் என்று எழுதப்பட்டிருப்பதை நம்பி கந்தையாவின் பாணை எடைக் கல்லுக்குப் பதிலாக தராசில் பயன்படுத்துவேன். "இப்போது பாருங்கள் என் ஐகோவும் அவரது பாணும் சம எடையாக இருக்கும்." என்று தராசில் இரண்டையும் எதிர் எதிராக வைத்தார்.. இரண்டும் சமமாக இருந்தது.

## கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார்

நேசரி பாடசாலையொன்றின் (ஆரம்பப்பள்ளி) ஒன்றின் உணவறையில் ஒரு கூடை நிறைய யாழ்ப்பாண மாம்பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த கூடையின் மேல், "ஒன் றுக்கு மேல் எடுக்காதீர்கள் கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார்" என எழுதி இருந்தது.

சற்று தொலைவில் ஒரு பெட்டி நிறைய யாழ் ராஜா ஐஸ் கிறீம் வைக்கப்பட்டிருந்தன. அந்தச் ராஜா ஐஸ் கிறீம் பெட்டியின் மீது ஒரு குழந்தை பின்வருமாறு எழுதியது. "எவ்வளவு வேண்டுமோ எடுத்துக்கொள்ளுங்கள் நல்ல சந்தர்ப்பம்" கடவுள், யாழ்ப்பாண மாம்பழத்தினை பாத்துக் கொணடிருக்கிறார்.

# கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய வர்த்தக வங்கிகள்

இலங்கை மத்திய வங்கியின் 2014 ம் ஆண்டின் அறிக்கை யில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் என கீழ் வரும் வர்த்தக வங்கிகளின் பெயர் விபரங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

01. ஆமானா பாங்க் பிஎல்சி
02. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
03. இலங்கை வங்கி
04. கார்கில்ஸ் பாங் லிமிடெட்
05. சிற்றி பாங்க் என் ஏ
06. கொமர்ஷல் பாங்க் ஒள் சிலோன் பிஎல்சி
07. டொயிகஷ் பாங்க் ஏஜி
08. டிஎவ்சிசி வர்தன பாங்க் பிஎல்சி
09. ஹபீப் பாங்க் லிமிடெட்
10. ஹற்றன் நஷனல் பாங்க் பிஎல்சி
11. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
12. இந்தியன் பாங்க்
13. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
14. எம்சிபி பாங்க் லிமிடெட்
15. நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
16. நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
18. மக்கள் வங்கி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. சம்பத் பாங்க் பிஎல்சி
21. செலான் பாங்க் பிஎல்சி
22. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேஷன் லிமிடெட்
25. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

26. டிஎவ்சிசி பாங்க்
27. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபன வங்கி
28. லுங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
29. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
30. தேசிய சேமிப்பு வங்கி
31. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
32. சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
33. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
34. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

டிஎவ்சிசி வங்கி கம்பனிகள் சட்டத்தின் கீழ் பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருப் பதுடன் 2015 ஜனவரி 6இலிருந்து டிஎவ்சிசி வங்கி பிஎல்சி என்ற பெயரில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிதியியல் துறை ஒருங்கிணைப்புச் செயன்முறையின் கீழ் எம்பீஎஸ்எல் சேமிப்பு வங்கி லிமிடெட் இலங்கை வணிக வங்கி பிஎல்சி உடனும் எம்சிஎஸ்எல்பினான்சியல் சேர்விஸஸ் லிமிட்டெட்டுனும் ஒருங்கினைக்கப்பட்டு. இலங்கை வணிக வங்கி மற்றும் பினான்ஸ் பிஎல்சி என்ற பெயரில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியாக 2015 ஜனவரி 1ம்நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்பட்டு வருகின்றது.

VANIGALAYAM
வணிகலயம்
மாதாந்த இலவச வணிக இதழில்
விளம்பரம் செய்ய தொடர்பு கொள்ளவும்...
021 454 5894 / 076 905 3179

**(சிறுகதை தொடர்ச்சி)**

இன்னொரு புதினம் என்ன என்றால் நொதன் சென்றல் ஹொஸ்பிட்டலில் இருதய சத்திரசிகிச்சை செய்யிற டொக்டர் ரவிப் பெருமாள் பிள்ளை ஒக்ஸ்போட் பல்கலைகழகத்தில லெக்சர் பண்றவராம்.. ஆல் பயங்கர கெட்டிக்காரராம்

சில நாட்களுக்குப் பின்னர்..

வேதா அம்மாவுக்கு கோல் எடுக்கிறான். அம்மா என்ன நடக்கிது எப்டி அப்பாவுக்கு இப்ப..

அவருக்கென்ன இளந்தாரி போல துள்ளிக்குதிக்கிறார்.

கடையடி சந்திக்கு இப்பதான் போறார்

அப்ப அன்றைக்கு அழுது வடிஞ்சாயன.

அன்றைக்கு மனுசன் துடிச்ச மாதிரி உனகென்ன தெரியும் உந்த நொதன் சென்றல் ஹொஸ்பிட்டல் காரருக்கு தான் நன்றி சொல்லோனும் என்ன வடிவா கவனிச்சவை தெரியுமே அந்த டாக்குத்தர்மார் உண்மையில கடவுள் மாதிரித்தான்.

அந்த நேர்ஸ் பிள்ளைகளும் அப்பா அப்பா என்று தங்கட தகப்பனை கவனிக்கிறது போல கவனிச்சிக்கொண்டதுகள். கடவுளே அதுகள் நல்லா இருக்கோணும்.

சரியென புராணம் பாடாத விடு விடு . என்ற வேதாவை இடைநடுவில மறித்த அம்மா இவ்வாறு தொடர்கிறார்

தம்பி டேய் எனக்கு ஏதேன்றாலும் கொப்பர கொண்டு போன நொதன் சென்றல் ஹொஸ்பிட்டலுக்கு தான் கொண்டு போங்கோடா..

இது வேதாவின் அம்மா

அம்மா உனக்கு ஒன்றும் நடவாதென ஒன்றும் யோசியாதேயுங்க. நொதன் சென்றல் ஹொஸ்பிட்டலுக்கு போய் உடம்மை ஒருக்கா புல்லா செக் பண்ணுங்கோ .

சரியம்மா நேரம் போட்டுது நான் ஆறுதலா பேந்து எடுக்கிறன் என மெல்பேன் நகரின் பரபரப்போடு இணைந்து கொள்கிறான் வேதா நின்மதியா மகிழ்ச்சியுடன்.

மரின்லக்ஸ்

# நீங்கள் முதலாளியா? முகாமையாளரா? இதனை ஒரு நிமிடம் வாசியுங்கள்

வணக்கம் பொஸ் வணிகலயத்தின் மூன்றாவது இதழில் உங்களை சந்திக்கின்றேன்

ஒரு பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்னால் யாராவது எங்களிடம் வந்து 20 வருடங்கள் கழித்து காசு குடுத்து தான் குடி தண்ணீர் வேண்டி குடிக்கும் நிலை ஏற்படும் என கூறியிருந்தால் அவர் முகத்தின் முன்பே நக்கல் சிரிப்பொன்றை சிரித்து நீ ..ஒரு அடி மட்ட முட்டாள் என சொல்லியிருப்போம் இல்லையா?

ஆனால் இன்றோ எவ்வித தயக்கமும் இன்றி மினரல் வோட்டர் தாங்கோ என்று காசை கடைக்காரரிடம் நீட்டுகிறோம் இது கூட பரவாயில்லை 50 ரூபாவுக்கு குடி தண்ணீர் இருக்கையில் 60 ரூபாய்க்கு விற்கும் குடி நீரின் பிரான்டை (Brand) (பெயரை) சொல்லி 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கிக் குடிக்கிறோம். குடிநீரை காசு கொடுத்து குடிப்பதே தண்டம் போதாக்குறைக்கு 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்து தண்ணீர் குடிக்க வேண்டுமா?

50 ரூபாய்க்கு விற்கும் நீரைத் தவிர்த்து 60 ரூபாய்க்கு அதாவது 10 ரூபாய் அதிகமாக கொடுத்து குறித்த பிராண்ட்டை (Brand) வாங்கி குடிக்கும் அளவுக்கு அப்படி என்ன இருக்கிறது? சுவை தண்ணீருக்கு ஏதையா சுவை? நிறம் தண்ணீருக்கு நிறமா? விளையாடுகிறீர்களா? அப்படி என்றால் வேறு என்ன? குறித்த பிராண்ட் (Brand) பாதுகாப்பான தண்ணியா? அது எப்படி சாத்தியம்? அது எவ்வாறு சாத்தியம்? ஒன்று தண்ணீர் பாதுகாப்பானதாக இருக்கவேண்டும் அல்லது பாதுகாப்பற்றதாக இருக்கவேண்டும் அதிக பாதுகாப்பு என்று ஒன்று இருக்கின்றதா? ஒரு பெண் கர்ப்பமாக இருக்கலாம் அல்லது கர்ப்பம் இல்லாமல் இருக்கலாம் இரண்டில் ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கும். கர்ப்பம் மாதிரித்தான். கிட்டத்தட்ட கர்ப்பம் என்றெல்லாம் சொல்ல முடியாது.

மினரல் வோட்டர் பாதுகாப்பானதாக இருக்கலாம் அல்லது பாதுகாப்பற்றதாக இருக்கலாம் அதிக பாதுகாப்பு என்றெல்லாம் சொல்வதற்கில்லை அப்படியெனில் 50 ரூபாய்க்கு தண்ணீர் உள்ள போது நாம் ஏன் 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்து 60 ரூபாய்க்கு தண்ணீரின் பிராண்டை (Brand) சொல்லி வாங்குகிறோம். அந்த சூட்சுமத்தையும் அதில் உள்ள மாயத்தையும் விளக்கும் நோக்குடன் தான் இந்த தொடரை எழுதுகிறேன். விளம்பரமும் அதனுடன் ஒருங்கிணைந்த பிராண்ட் (Brand) விற்பனை மேம்பாடுமே காரணம் எனலாம். (Advertising and integrated brand promotion) நமது நாட்டு நிறுவனங்களாகட்டும் பல்தேசிய நிறுவனங்களா கட்டும் வாடிக்கையாளரை கவரும் வகையில் பிராண்டுகளை உருவாக்கி அவற்றில் வாடிக்கையாளர் மயங்கும் வண்ணம் விளம்பரப்படுத்தி பொருட்களையும் சேவைகளையும் சந்தைப் படுத்துகிறார்கள்.

இந்தியாவில் உள்ள பெப்சி கம்பனி வருட மொன்றுக்கு 40 கோடி லீற்றர் குடிநீரை விற்பனை செய்கி றார்கள் அந்த பிராண்ட் ஐ (brand) விளம்பரப்படுத்த சுமார் 20 கோடி இந்திய ரூபாயினை செலவழிக்கிறார்கள். அதற்காக விளம்பரப் படுத்தினால் போதும் விற்பனை பிய்த்துக்கொண்டு போகும் என்று சொல்லவில்லை. முதற்படியாக வாடிக்கையாளர்களின் தேவை யறிந்து அந்த தேவையை மற்ற போட்டியாளர்களை விட திறம்பட பூர்த்தி செய்யும் பிராண்ட் ஐ (brand) உருவாக்க வேண்டும். அதனை எப்படிச் செய்வது? அதற்கான செயல்முறைகள் என்ன? என்பதனைப் பற்றி விளக்குவதே இந்த தொடர் ஆகும். விளம்பரம் என்பது இஞ்சி விற்பவர் தொடக்கம் இன்சூரன்ஸ் செய்பவர் வரை தேவையினதாகும்.

சந்தையில் பிராண்டுகள் (brand) அடையும் விற்பனை யும் குவிக்கும் இலாபமும் பெறும் வெற்றிகளும் நமக்கு தெளிவாக உணர்த்துவது விளப்பரத்தின் மகிமையையும் அதன் மகத்துவத்தினையும். விளம்பரத்தினால் மட்டுமே இதனை பெற்றுவிடலாம் என்பது உண்மையல்ல. நல்ல பிரண்டை (brand) உருவாக்கிய பின் அதனை திறம்பட நுகர்வோருக்கு அல்லது இலக்கு குழுவினருக்கு அறிமுகப்படுத்த விளம்பரம் இன்றியமை யாதது ஆகும். சில பொருட்களை நாம் இயல்பாகவே வாங்குவதற்கு இசைவாக்கம் அடைந்திருக்கின்றோம் இதற்கு காரணம் அந்தப் பொருடகளின் விளம்பரமே காரணம். அத்துடன் அது தரமானதாகவும் இருக்கின்றது. தரமும் விளம்பரமும் இணையும் போதே விற்பனையில் கொடி கட்டிப்பறக்கின்றது. கொக்கோகோலா போன்ற சில குளிர் பானங்கள் அமோகமாக விற்பனையாகின்ற' போதும் அவை விளம்பரத்தினை கைவிடுவதில்லை.

தொலைக்காட்சியில் கண்டுகளித்து வானொலியில் கேட்டு ரசித்து போஸ்ட்டர்களில் பார்த்தால் தெரிவது மட்டுமல்ல விளம்பரம். பிராண்டுகளை (brand) மக்களிடம் கொண்டுசென்று அவர்களை வாங்கத்தூண்டும் பல வழிகளில் விளம்பரங்களும் ஒன்று. விளம்பரத்தின் சகோதர சகோதரிகள் பலவுண்டு.

வெகுசனத் தொடர்பு
விற்பனை மேம்பாட்டுச் சலுகைகள்
நேரடிச் சந்தைப்படுத்தல்
நிகழ்ச்சிகளுக்கான அனுசரனை

என பிராண்டை விளப்பரப்படுத்த பலவழிகள் உண்டு. இதன் கலவையையே சந்தைப்படுத்தும் (Marketing ) தகவல் தொடர்பு என்பர்.

சந்தைப்படுத்தும் (Marketing) தகவல் தொடர்பு என்றால் என்ன? வாடிக்கையாளரிடம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரண்டை (brand) அறிமுகப்படுத்தி அவரை வாங்கத்தூண்டும் அனைத்து முயற்சிகளையும் செயல்களையும் குறிக்கும். ஒரு வகையில் சந்தைப்படுத்தும் (Marketing ) தகவல் தொடர்பு என்பது பிரண்டின் குரல், வாடிக்கையாளிடம் பேசி நட்பு கொண்டு அவருடன் ஒரு நீண்ட உறவு மலர உதவும் வழிமுறை யெனலாம்.

ஆக சந்தைப்படுத்துவோரிடம் விளம்பரம் தவிர வேறும் பல ஆயுதங்களும் உண்டு விளம்பரதாரரை அடைவதற்கு என்பது புலனாகின்றது. இவற்றை திறம்பட பிரயோகிக்கும் போது ஒருங்கினைந்து செயலாக்கும்போது வாடிக்கை யாளர்களை அடைய முடிகிறது அவரை ஆள முடிகிறது.

சரி விளம்பரம் என்றால் என்ன? நம்மை சிரிக்க வைப்பதா? சிந்திக்க வைப்பதா? பொருட்களை அறிய வைப்பதா? அதன் பயன்களை புரிய வைப்பதா? தேவைகளை பூர்த்தி செய்ய உதவுவதா? நமக்கு தேவையற்றதனை கூட வாங்க வைப்பதா? அது தேவையானதா தேவையற்றதா? என்பதை அடுத்த இதழில் பார்க்கலாம். **தொடரும்...**

**டேவநேசன்**

# வனிக்கா சேஜிக்கல்ஸ்

இல 203, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

சத்திரச்சந்தியிலிருந்து 30 மீற்றர் தூரம் (ஆஸ்பத்திரி வீதி)

வயோதிப கால சுகவாழ்வுக்கத் தேவைாயன அனைத்து வகையான வீல் செயாஸ் வகைகளும் கொழும்பைவிடவும் குறைவான விலையில் பெறலாம். அவசர சத்திரச் சிகிச்சைகளுக்குத் தேவையான உபகரணங்களை 24 மணிநேரத்திற்குள் தருகிறார்கள். குருதியில் சீனியின் அளவை துல்லியமாக தெரிந்து கொள்ள வாழ்நாள் உத்தரவாதம் கொண்ட மேஜர் வழு குளுக்கோ மீற்றரை வெறும் 2500 ரூபாவுக்கு பெறலாம். அதற்கான ஊசி, ஸ்ரிக்ஸ் இலவசம்.

## 4 CH CCTV CAMERA



- # 4Ch STARTECH FULL HD DVR
- # 4, 1.3 Mega Pixel Bullet Camera
- # 19" AOC/HP/Sumsung Moniter
- # 1000 GB Hard Disk
- # 650V DCP UPS
- # 1 Year Warranty
- # 2 Year Service Free
- # Free Online Setup

Normal Price : 92,500

**Discount Price : 80,000**

நம்பமுடியாத விலையில்.....

## CCTV Camera

உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன்

**உங்களுடன் நாம்**

- Internet, Mobile மூலம் எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட கால உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவை
- மிகத் துல்லியமான 24 மணிநேர Video பதிவு.
- இலகுவான கண்காணிப்பு வசதி Monitor / TV மூலம்.
- கணணித்(Computer)தேவை அவசியமற்றது.
- பதிவுசெய்யப்படும் Videoக்களை கடவுச்சொல் (Password) மூலம் பாதுகாக்கும் வசதி.

Full HD 1080P



இல. 315,1/2 பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

@j SYSTEMS

Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner

AJ SYSTEMS i (PVT) LTD


நெல்லியடி
நெல்லை சில்க்
Nelliady
Nellai Silk
நெல்லியடியில் நெல்லல சில்க தீபாவளி தினத்தினை முன்னிட்டு
இப்போது 15 % விலைக்கழிவுடன் அனைத்து ஆடைகளையும்
விற்பனை செய்கிறார்கள். நவநாகரீக நங்கையரின் மனம்
கவர்ந்தவள் நெல்லல சில்க். கட்டிளம் காளையரின் கட்சிதமான
ஆடைத் தெரிவுகளுக்கு நெல்லல சில்க். மலிவான விலைகளில்


அரச பாமசி
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
SPC
மருந்துகளுக்கு ஏன் அதிக காசை செலவு செய்கிறீர்கள்?????
தனியார்துறை பாமசிகளை விட மிகக்குறைந்த விலையில்
மருந்துவகைகளை வாங்கலாம்.
5 வயதிற்கு கீழ் 55 வயதிற்குமேல், கர்ப்பிணித்தாய்மாருக்கும்
வைவத்தியரின் மருந்துச்சிட்டை வைத்திருப்பவர்களுக்கு
5 வீத விலைக்கழிவு
மருந்துகளை வாங்கும் போது spc மருந்து என கேட்டு
வாங்கவும்
இல 149, கே.கே.எஸ்.வீதி, சந்திரச்சந்தி,
யாழ்ப்பாணம்